செ.வெ.எண்: 54 நாள்: 21.11.2016

# பத்திரிகைச்செய்தி

## புதுக்கோட்டை மாவட்டத்தில் பயிர் காப்பீட்டு திட்டத்தில் 30.11.2016க்குள் பதிவு செய்திட விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சியர் வேண்டுகோள்.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத்திட்டத்தில் நடப்பு சம்பா நெல் பயிருக்கு பிரிமியம் செலுத்துவதற்கான காலக்கெடு 30.11.2016 அன்றுடன் முடிவடைவதால் விவசாயிகள் விரைந்து காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில் நடப்பு சம்பா பருவத்தில் பயிர்க்காப்பீடு செய்யும் விவசாயிகளுக்கு இயற்கைச் சூழ்நிலையின் காரணமாக விதைப்பு செய்யப்பட்ட பின்பு அந்த வருவாய் கிராமத்தில் 75 சதவீதப் பரப்பில் பாதிப்பு ஏற்படும் போது மொத்தக் காப்பீட்டுத் தொகையில் 25 சதவீதம் இழப்பீடு வழங்கப்படும். பயிர்ப் பருவத்தின் இடைக்காலப் பாதக நிலையான கடும் வறட்சி, வெள்ளம் போன்ற இயற்கை இடர்பாடுகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட வருவாய் கிராமத்தின் உத்திரவாத மகசூல் 50 சதவீதத்திற்குக் கீழ் குறைவாக இருந்தால் மாவட்டக் கண்காணிப்புக் குழு ஆய்வு செய்து பாதிப்பிற்கேற்ப இழப்பீடு வழங்கும். மேலும், அறுவடைக்குப் பின் வயலில் தானியங்களைக் காய வைக்க வேண்டிய பயிர்களுக்கு அறுவடைக்குப் பின் ஏற்படும் வெள்ளம், புயல் போன்ற இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கும் விதிகளின்படி இழப்பீடு வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நடப்பாண்டு நெல் சம்பா பருவத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட பயிர்க் கடன் தொகை ஏக்கருக்கு ரூ.23000/-ல் நிர்ணயிக்கப்பட்ட தவணைத்தொகை (பிரிமியம்) ஏக்கருக்கு ரூ.4370/-இல் விவசாயிகள் செலுத்த வேண்டியது ஏக்கருக்கு ரூ.345/- மட்டுமே ஆகும். மீதத்தொகை மத்திய, மாநில அரசுகள் சமஅளவில் செலுத்தும். பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் குத்தகைதாரர்கள் உட்பட அனைத்து விவசாயிகளும் பங்கேற்கலாம். இதில் கடன்பெறும் மற்றும் கடன்பெறா விவசாயிகளுக்கு பிரிமியம் செலுத்துவதற்கு ஒரே காலக்கெடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பயிர்க்காப்பீடு செய்யும் கடன்பெறா விவசாயிகள் தாங்கள் வங்கிக்கணக்கு வைத்திருக்கும் தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் அல்லது நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி ஆகியவற்றில் பிரிமியம் செலுத்தலாம். பிரிமியம் செலுத்த விரும்பும் விவசாயிகள் முன்மொழிவுப் படிவம் ஏதேனும் ஓர் அடையாள அட்டை (ஆதார் அட்டை, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம், பான்கார்டு) வங்கிக்கணக்குப்புத்தகத்தின் முன்பக்க நகல், கிராம நிர்வாக அலுவலர் சான்று ஆகியவற்றைச் சமர்ப்பித்துத் திட்டத்தில் பதிவு செய்துகொள்ளலாம்.

இது தொடர்பான கூடுதல் விபரங்களுக்குத் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க மையம், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிக்கிளைகள் ஆகியவற்றைத் தொடர்பு கொண்டு 30-11-2016க்குள் பிரிமியம் செலுத்தி விரைந்து பயிர்க்காப்பீடு செய்யுமாறு அனைத்து நெல் சாகுபடி விவசாயிகளும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**